# நட்பேடு



Magazin der Freunde ✲ Magazine of Friends

விசுவாவசு வருடம்

மாசி மடல்

ஸ்டுட்கார்ட் தமிழ்ச் சங்கம் e.V , ஜெர்மனி



Our association Stuttgart Tamil Sangam e.V is a non-profit, non-sectarian, cultural and social organization with the aim of bringing together all those interested in the cultural and linguistic heritage of Tamil.

The main objective of our association is to promote the Tamil language, tradition and heritage in Germany. To achieve this, we embark on a journey by organizing and conducting various educational programs and traditional events.

In addition, we want to pass on our Tamil culture and customs to fellow human beings here in Germany and make them known to each other as well as invite them to work together. Our association will be a home for all cultures and provide everyone the opportunity to present their talents and thereby motivate others. Furthermore it is important that our children get to know the Tamil culture as well as our tradition.

Our association also offers the opportunity to network with other organizations, with the goal of exchanging ideas and learning new things from each other.

| Contents | Page No. |
|---|---|
| குறள் பேசும் பாடம் | 4 |
| ஒளி பரவட்டும் | 5 |
| கதை கதையாம் காரணமாம் | 6 |
| ஊர்க்குருவி | 7 |
| Is Virat Kohli the Last Superstar of Cricket? | 9 |
| ஏன்? | 11 |
| Historical Highlights | 13 |
| கிறுக்கல்கள் | 14 |
| Another warren in progress | 15 |
| ஸ்டுட்கார்ட் தமிழ்ச் சங்கம் e.V – தமிழ்ப் பள்ளி | 19 |
| An act of God | 20 |
| cyber security | 21 |
| Silent sunshine deficit | 23 |
| அக்கம் பக்கம் | 24 |
| அறிந்ததில் அறியாதது | 26 |
| கீற்றல்கள் | 27 |
| Wildlife Wonders Around the World | 28 |
| CTRL + Learn: My Computer Adventures | 30 |
| Short and Easy German Sentences | 33 |
| பதில் தேடி விளையாடு | 34 |
| நிழற்பதிவு | 35 |
| Earning in the crypto world | 36 |
| Nizhal nenjangal | 39 |
| வாசகர் மடல்கள் | 41 |
| சொல்லுங்கள் வெல்லுங்கள்! | 43 |
| இறுதியல்ல.., நிறைவு | 44 |

# குறள் பேசும் பாடம்

குறள் 56: அறத்துப்பால், இல்லறவியல், வாழ்க்கைத் துணைநலம்

**தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்**



**Tamil (தமிழ்)**
**உடலாலும் உள்ளத்தாலும் தன்னைக் காத்து, தன் கணவனின் நலன்களில் கவனம் வைத்து, குடும்பத்திற்கு நலம் தரும் புகழைக் காத்து, அறத்தைக் கடைப்பிடிப்பதில் சோர்வடையாமல் இருப்பவளே மனைவி.**

**English:**
**Woman protects herself in body and mind, cares for the well-being of her husband, safeguards the honor of her family, and follows the path of virtue without becoming weary**

**German (Deutsch)**
**Die Frau hütet ihre Keuschheit, dient ihrem Mann, bewahrt den guten Ruf und ist unermüdlich.**

# ஒளி பரவட்டும்

அன்பு வாசகர்களே,
அனைவருக்கும் மகளிர் தின நல்வாழ்த்துகள்.
இன்றைய சமூக ஊடக உலகம் நமக்கு எண்ணற்ற கருத்துகளையும் காட்சிகளையும் தொடர்ந்து கொண்டு வருகிறது. அவற்றில் சில பதிவுகள் மிகவும் எளிமையாக இருந்தாலும், அவை சொல்லும் செய்தி ஆழமானதாக இருக்கும். சில நேரங்களில் ஒரு சிறிய படம் அல்லது சுருக்கமான காட்சி கூட நீண்ட விளக்கங்களை விட வலிமையான உணர்வை நமக்குள் உருவாக்கிவிடுகிறது.
அப்படிப்பட்ட ஒரு பதிவை சமீபத்தில் நான் பார்த்தேன். அந்தப் படத்தில், ஒரு பெண்ணின் இரு பரிமாணங்கள் அழகாகக் காட்டப்பட்டிருந்தன. ஒரு புறம் நவீன வாழ்க்கையை நினைவூட்டும் உயரமான காலணி; மறுபுறம் நம் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் பரதநாட்டியக் கால் அலங்காரம். இந்த இரண்டு காட்சிகளும் சேர்ந்து, இன்றைய பெண் நவீனத்தையும் பாரம்பரியத்தையும் சமநிலையாக தன்னுள் தாங்கிக் கொண்டு வாழ்கிறாள் என்ற எண்ணத்தை வெளிப்படுத்தியது. எளிமையாகத் தோன்றினாலும், அந்தக் காட்சி ஆழமான சிந்தனையைத் தூண்டியது.
அந்த எண்ணத்தோடு, மகளிர் தினத்தை முன்னிட்டு இந்த இதழை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம். பெண்களின் அனுபவங்கள், சாதனைகள், சிந்தனைகள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு பல சுவாரஸ்யமான கட்டுரைகள் இந்த இதழில் இடம்பெற்றுள்ளன. அவை வாசகர்களுக்கு புதிய பார்வையையும் ஊக்கத்தையும் தரும் என நம்புகிறோம்.



வாசகர்களின் தொடர்ந்த ஆதரவும் பங்களிப்பும் தான் நட்பேடு இதழின் உண்மையான பலம். எங்களுடன் இணைந்து இந்தப் பயணத்தை தொடர்ந்து அழகுபடுத்துவீர்கள் என்ற நம்பிக்கையுடன்...

பதிப்பாளர்:
மஞ்சுபார்கவி சுகுமாரன்




# கதை கதையாம் காரணமாம்

குருவே, என் வாழ்க்கையில் மகிழ்ச்சியே இல்லை" என்று குருவிடம் சிஷ்யன் வருத்தப்பட்டான். குரு, அவனை ஒரு தோட்டத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கே வண்ண வண்ணப் பட்டாம்பூச்சிகள் அங்குமிங்கும் பறந்து கொண்டிருந்தன. "இதோ இவற்றில் ஒன்றைப் பிடித்துக்கொண்டு வா” என சிஷ்யனிடம் குரு சொன்னார். பட்டாம்பூச்சிகளைத் துரத்திக்கொண்டு ஓடினான். ஆனால் ஒன்றைக்கூட அவனால் பிடிக்க முடியவில்லை. "பரவாயில்லை, வா. நாம் இந்தத் தோட்டத்தின் அழகை ரசிக்கலாம்" என்று அவனை தோட்டத்தின் நடுவே அழைத்து வந்தார். இருவரும் அமைதியாக நின்றுகொண்டு தோட்டத்தின் அழகை கண்கள் விரியக் கண்டு களித்துக் கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் பட்டாம்பூச்சிகள் பல அவர்களைச் சுற்றிப் பறக்கத் தொடங்கின. மேலும், இரு பட்டாம்பூச்சிகள் அவன் கைகளிலேயே வந்தமர்ந்தன. குரு சிரித்துக்கொண்டே கூறினார். "இதுதான் வாழ்க்கை. மகிழ்ச்சியைத்தேடி துரத்துவது அல்ல வாழ்க்கை. வாழ்க்கையை அமைதியாக நின்று ரசிக்கும்போது மகிழ்ச்சி நம்மிடமே தானாக வந்து சேரும்.".

# ஊர்க்குருவி -8

## யாதுமானவள் !

அம்மா...
ஆண்டவனின் பாதியும்
அன்பின் மிகுதியும் நீ
கரும்பில் மறைந்த பாலாக
கருதினும் இனிப்பாய் நீ
நெருங்கும் மணத்தின் ஊடாக
கருவில் சேர்ப்பாய் நீ
உருவில் உலகின் பேரழகி
உள்ளார்ந்த அன்பில் பெருமழை நீ
மயக்கும் பொன்னின் மேனி
மனதால் உருகும் பனித்துளி நீ !
அதிரும் சொல்லே அறியாதவள்
அகிலும் எதிலும் அரிதானவள் நீ!

மறைக்கும் கதவை இடுக்கில் பரவி
நிறைக்கும் அறையை ஒளி!
இருக்கும் தொலைவை மறைக்கும்
உன் நினைவே என்னை நடத்தும் வழி !

நீ பிசைந்து கொடுத்த
பழைய சோற்றின் கடைசிப் பிடி சுகம்
நீளும் உலகப் பயணங்களில்
எதிலும் கிடைக்கா வரம் !

தினம் தினம் நிரூபிக்கிறேன் !
சொல்லடங்காப் பிணைப்பை நண்பர்களிடம்
சோர்விலா பாசத்தை உறவினரிடம்
மனமுருகும் காதலை மனையாளிடம்
மாண்புடை வாழ்வை மக்களிடம்
எதிர்பார்ப்பில்லாக் கடமையை சகோதரர்களிடம்
எல்லாம் வல்ல இறைவனிடம்கூட பக்தியை
தினம் தினம் நிரூபிக்கிறேன் !

நிரூபிக்கத் தேவையில்லாத
நிஜமான நானாக
தேய்ந்தாலும் ஏற்கும் தாயே
தேவதை எனக்கு நீயே !

மறுமுறை பிறக்கும் ஆசை
நூறு முறை வருவதெல்லாம் உன்னால் !
ஒரே முறை பிறந்தேனா.. ஐயம்...
இது ஓராயிரம் ஆகவும் இருக்கலாம்!!!



# ஊர்க்குருவி -8

திருநெல்வேலி அல்வாவின் சுவை
மாவிலா, சர்க்கரையிலா, நெய்யிலா ?
இல்லை, தாமிரபரணி நீரில் !
"கௌரி" மகன் எனும்
கௌரவம் இல்லையேல்
என் எல்லா மகுடமும்
வெறும் உலோகமே !!!



அன்பின் அரவணைப்பை
ஆன்ற அறிவுரையை
பசிக்கு உணவை
பிணிக்கு மருந்தை
மழைக்குத் தேநீரை
மனதுக்கு மகிழ்வை
சொல்லில் இனிமையை
சோகத்தில் ஆதரவை
வெற்றியில் பாராட்டை
தோல்வியில் ஊக்கத்தை
அறியா இடத்தில் புன்முறுவலை
அறிந்த இடத்தில் அக்கறையை
அருளும் எல்லோரிலும்
அம்மா எட்டிப்பார்க்கிறாள் !



உங்களில் யாரேனும்
மேற்சொன்ன எதையேனும்
எதிர்பார்ப்பின்றி யாருக்கேனும்
எப்போதேனும் கொடுத்திருந்தால்
உங்களிலும் என் அம்மா இருக்கிறாள் !!!

என்னில் கலந்துபோனோர்
என்னைக் கடந்துபோனோர்
வேதனையில் தவிக்கையில்
வேண்டிய தருணத்தில்
தாய்மையின் வாசனையை
தானமென வழங்கியதால்
உலகெல்லாம் அம்மாக்கள்
ஓராயிரம் எனக்குண்டு!

வாழ்த்தும் அம்மாவின் நினைவாலே
வாழ்வில் என்றும் நிறைவுண்டு !

**என்றும் அன்புடன்**
**மெய்யரசு நடராஜன்**

# IS VIRAT KOHLI THE LAST SUPERSTAR OF CRICKET?

We all know who Virat Kohli is and what he has contributed to Indian cricket. His impact goes far beyond statistics it’s about presence, intensity, and an aura that commands attention. But an important question remains: will anyone truly replace him? Will another cricketer carry the same aura that Virat does?

During his generation, many players were compared to Virat Kohli. Yet, time proved that he stood taller than the rest. Fast forward to 2026, most of those comparisons have faded away. While many of his contemporaries are no longer in the spotlight, Virat continues to score centuries and compete fiercely with the younger generation a rare feat in modern cricket.
So, will there be another superstar after Virat Kohli? Possibly. But will they be able to pull crowds the way he does? That seems unlikely.

The harsh reality is that cricket viewership has declined over the past decade. If we look back to the early 2000s, the game was filled with crowd-pulling icons like Sachin Tendulkar, Ricky Ponting, and Sanath Jayasuriya. These players didn’t just play the game they defined it, drawing massive audiences wherever they went.
Even today, there are talented players across the cricketing world. But very few possess the ability to single-handedly pull crowds, ignite stadiums, and command global attention. At present, Virat Kohli stands almost alone in that regard.
There may be another superstar in the future but matching Virat Kohli’s crowd-pulling power and cultural impact might be the toughest challenge modern cricket has to face.



-RAM PRAKASH


HAPPY WORLD
WILDLIFE DAY
MARCH-3

# ஏன்?



"பெண் இதைச் செய்யக்கூடாது...
பெண் அப்படிப் பேசக்கூடாது..."

இப்படி பல குரல்கள் நிறைந்த உலகத்தில் தான் நான் வளர்ந்தேன்.

"அம்மா சொல்வதைக் கேள்...அப்பா சொல்வதைக் கேள்..."
என்று சொல்லப்பட்டது.
ஆனால், "நான் என்ன நினைக்கிறேன்?" என்று யாரும் கேட்கவில்லை.

ஏன் நான் கோயிலுக்குப் போகக்கூடாது?
ஏன் நான் இதைச் செய்யக்கூடாது?
ஏன் நான் அதைச் செய்யக்கூடாது?

ஒரு நாள், அந்த "ஏன்" எனக்குள் நின்றுவிடவில்லை.
அது பதில் தேட ஆரம்பித்தது.

அப்போது புரிந்தது
நமக்கு சொல்லப்படுவது எல்லாம்
அப்படியே நம்ப வேண்டிய அவசியமில்லை.
அதை யார் சொன்னாலும்.
எத்தனை பேர் சொன்னாலும்.

நாம் யோசிக்கலாம்.
நாம் கேட்கலாம்.
நாம் தேர்வு செய்யலாம்.

நான் கேள்வி கேட்க ஆரம்பித்தபோது,
என் வாழ்க்கை மெதுவாக மாறத் தொடங்கியது.
என் முடிவுகள் எனக்கே சொந்தமானவை ஆனது.
என் பாதை எனக்கே தெளிவானது.

ஒரு பெண்ணின் வலிமை அளவிட முடியாதது.
உயிரை உலகிற்கு கொண்டு வரக்கூடிய அவள்,
தன் கனவுகளை வாழ முடியாதா?

பெண் என்பது மானத்தின் காவலாளி அல்ல.
அவள் ஒரு உயிர்.
அவள் ஒரு உணர்வு.
அவள் ஒரு சக்தி.

நமக்கு சொல்லப்படுவதைக் கேட்பது மட்டுமல்ல,
அதை ஏற்றுக்கொள்வதற்கு முன்
ஒரு "ஏன்?" என்று கேட்கக் கற்றுக்கொள்வோம்.

உங்களுக்குள் இருக்கும் குரலைக் கேளுங்கள்.
அதற்குப் பயப்படாதீர்கள்.

ஏனெனில்
ஒரு பெண் கேள்வி கேட்கும் தருணம்,
அவள் வாழ்க்கை மற்றவர்கள் எழுதும் கதையல்ல;
அவள் தானே எழுதத் தொடங்கும் கதை ✨

**-Shwetha**



> We believe in strong partnerships, not just with patients, but with people who care about each other.

## WHY US?

- *Germany's first AI-powered dental monitoring system.*
- *3D scans & digital diagnostics for precision and clarity.*
- *In-house dental lab – faster, more accurate results.*
- *Multilingual, culturally aware team.*
- *Personal consultation & transparent treatment – always*

# WEISS32

PLATINUM SPONSER

WEISS32 ZAHNZENTRUM IS A LEADING DENTAL CENTER IN STUTTGART, COMMITTED TO PROVIDING WORLD-CLASS DENTAL CARE, ADVANCED TREATMENTS, AND RADIANT SMILES.WE COMBINE TECHNOLOGY, EXPERTISE AND EMPATHY TO PROVIDE FAMILIES WITH CARE BUILT ON TRUST, TRANSPARENCY, AND COMFORT.

**WITH WARMTH AND EXCELLENCE, WEISS32 ZAHNZENTRUM LIGHTS UP OUR CELEBRATION THIS DIWALI.**

+49 (0) 711 / 76 02 69 | info@weiss32.de | www.weiss32.de

# INDIA'S FUTILE WALL—NEDUMKOTTA




Constructed by the Kingdom of Travancore and the Kingdom of Kochi to stop the might Tipu sultan now a part of past history

Source- http://www.southasian-archaeology.com/2018/01/the greatwall-of-malabar-ruins-of.html

Walls around the world are of little help in defending countries, and
history has many examples on this topic. One example is the Travancore kingdom wall in Kerala, India, to stop Tipu Sultan from invading. Yes, India also had a wall once upon a time.

## EIC period:

During the early period of East India Company in India, there was a constant switch in allies and enemies. East India company got dragged into local politics' muddy business and needed to spend money and troops to keep their trading rights. One of the big feuds was between the Tipu Sultan, King of Mysore, and the Kingdom of Travancore.



*EIC office in London. Source-Wikipedia*

Tipu Sultan was in full swing to expand his kingdom into India's southern parts via Kerala and occupied up to Kozhikode. The Kingdom of Travancore and the Kingdom of Kochi decided to build a wall with Sea and mountain as barriers on two sides. The wall was 48 km long, 20 feet wide, and 12 feet high. The wall was constructed along the Periyar river starting from the Arabian sea to the Western Ghats. The wall's construction was supervised by the famous Dutch Captain Eustachius de Lannoy from 1757–1762. It was named Nedumkotta. The wall was fortified in various points with forts and caves, manned by Travancore and Kochi soldiers. It had trenches filled with poisonous snakes and batteries to fire for defense. The ammunition was kept in the caves to keep it dry.

Tipu sultan tried to break the wall in various attempts but succeeded with a huge loss of workforce. The flooding of the Periyar river shortened his immediate victory as his ammunition got wet. Tipu Sultan retreated with his troops with fears of British invasion in Mysore. The wall was handled for a few years by the British East India Company, and with no local threats insight, the wall was left in ruins.The wall doesn't remain intact anymore. The once rival Travancore and Mysore are now part of the Republic of India. The irony is that wall was mined to build a highway connecting Mysore and Travancore. History teaches us the same lesson always to keep it dry.

**LETS BUILT BRIDGES AND NOT WALLS.**

**-Karthik Nambi**

# கிறுக்கல்கள்:



1.கல்லூரிச் சாலையில் பார்த்த
அவளை,
என் வாழ்க்கைச் சாலையில் நடக்க
அழைத்தேன்...
“காத்திரு” என்று சொல்லி நகர்ந்தாள்.
அவள் வருவாளா?!

2.அடியே...
விண்ணைத் தாண்டி வர வேண்டாம்...
என் எண்ணத்தில் தினம் வந்தாலே
போதுமடி!

3.தேர்தல் நெருங்குகிறது...
எனது உள்ளம் என்னும் வாக்கு
இயந்திரத்தில்
“இதயம்” என்ற சின்னத்தில்
வாக்களித்து,
நம் காதலை வெற்றி பெறச்
செய்வாயா? 💞

*-Ramkumar Ramamoorthy*




## !!! ஒரு சூறாவளி கிளம்பியதே !!!



Mr. Master was so curious and excited about all the learnings he had so far and was very sure that he is going to pull a number of red lotus flowers out of mud and fill up his Bank Balance..........,



But.. But.. But.., the reality was not so green and glowing. All he had in mind was

- Don't copy from others
- Look for trusted promoters
- Start slow

But he can't start. He felt like he is left alone blind folded in an oceran of sharks

He felt like he need a break. What a timing !!! His phone rings with the banner that gets a smile on his face.

Mr. Blaster alias Daklas calling !!!




**Mr. Master**: Hello dude !!!!

**Daklas**: Dude,  I just helped an elderly couple carry some baggages and they told me I look like a well built guy. So I am not motivated to start with gym. I picked up Mr. Schwarzeneger as role model and booked a membership. Next time if you are planning for a meet up, remember I will be at the gym every day 1800 to 1930. See you bye !!!

That was  fast, unexpected, typical Daklas and .....(all the unnecessary stuff). Mr. Master was confused and happy at the same time. He picked up a key word from this conversation - “Role Model”. He thought, this time Stockananda came in disguise of Daklas... probably.........




He started searching for a role model in value invetsing. He came across a great man of the centrury...

## !!! Mr. Warren Buffet !!!

The moment felt special for him. Internet is full of his quotes, achievements and interviews. He stumbled across a youtube short video where Buffet was saying no body can beat “S & P 500” over a period of time. This took him to the concept of “Index funds” and it was fitting perfectly for him to start with and learn from the performance of the fund to pick a stock of this choice.

He saw that Buffet had a lot of fan boys across the globe. One of them said in his Instagram reel, that Buffet’s Letter to investors every year are MASTER CLASS lessons for budding investors. Mr. Master printed them and started reading





He fell in love with the letters that he spent the whole night reading them. He is gaining more and more clarity now. He laid out a very clear next steps.

- Start a Depot account
- Start an SIP in S&P 500
- Start analyzing stocks in S&P 500

He noticed in Buffet's letters that he spoke a lot about good promoters/business owners. This made him realize that he found the right guru on the same planet. He understood that God wont come always in the form that you expect.

He had a very clear To Do and NOT To Do's in his mind. He is not going to copy what Buffet buys and sells but he will focus to learn the WHYs behind !!!!!!!!!

!!!!!
டெல்லிக்கி ராஜா நாலும் தாத்தா சொல்லை தட்டாதே !!!!!



-Vignesh

# Stuttgart Tamil Sangam e.V. – தமிழ்ப் பள்ளி






தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ள விரும்பும் புதிய மாணவர்களை எங்கள் கல்விக் குடும்பத்திற்கு அன்புடன் வரவேற்கிறோம்.

Tamil School Registration Process:

➡ Step 1: Online Sign-Up (இணையப் பதிவு)
எங்களது பதிவு இணைப்பிற்குச் சென்று தேவையான விவரங்களைப் பூர்த்தி செய்யவும். பதிவு செய்யும் போது தேவையான அனைத்து சான்றுகளையும் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
பதிவு இணைப்பு:
https://stuttgarttamilsangam.com/STSangam/studentSignIn



➡ Step 2: Trial Classes (மாதிரி வகுப்புகள்)
உங்கள் பதிவுக்குப் பிறகு தமிழ்ப் பள்ளியின் ஒருங்கிணைப்பாளர்கள் உங்களைத் தொடர்பு கொண்டு, மாதிரி வகுப்புகளுக்கான தேதிகளை அறிவிப்பார்கள். உங்கள் குழந்தை கற்றல் சூழலை அனுபவிக்க இது ஒரு சிறந்த வாய்ப்பு.

➡ Step 3: Final Enrollment (இறுதிச் சேர்க்கை)

மாதிரி வகுப்புகளுக்குப் பிறகு தொடர விரும்பினால், மாணவர்கள் தமிழ் மெய்நிகர்க் கழகத்தில் (TVA) அதிகாரப்பூர்வமாக பதிவு செய்யப்படுவார்கள். இதனுடன், உங்கள் குழந்தையின் தமிழ் கற்றல் பயணம் தொடங்கும்.

## நம் தலைமுறைகள் தமிழுடன் தழைக்கட்டும்!

# An act of God

Yes its an act of God, as I recover from my losses and failures;

Yes its an act of God, as I feel humble when I accept my successes;

Yes its an act of God, as I find things hard to reason;

Yes its an act of God, as truth-finding involves substantial labor and collective human effort;

Yes its an act of God, as I intend to keep the oppressive social structures intact;

Yes its an act of God, as I was told so;

Yes suffering is the first noble truth and God is merely a symptom as the apatheist Buddha proclaims.

~Deepak Vedha Raj

# CYBER SECURITY

சில நேரங்களில், எதிர்பாராத சில விஷயங்கள் நமக்கு நடக்கும், அது நல்லதாகவோ அல்லது கெட்டதாகவோ இருக்கலாம்.
இருப்பினும், வள்ளிக்கு இது மிகவும் நல்ல சம்பவம். அவளது அம்மாவுக்கு "Suttgart Police Department" லிருந்து அழைப்பு வந்தது, அவளுடைய மடிக்கணினி கண்டுபிடிக்கப்பட்டதாக அவர்கள் கூறினர். வள்ளி மிகவும் மகிழ்ச்சியாக துள்ளிக் குதித்தாள்.
ஒரு Stranger பூங்காவிற்கு அருகில் அவளதுமடிக்கணினியைக் கண்டுபிடித்து காவல்துறையிடம் ஒப்படைத்ததாகத் தெரிகிறது.




ஆனால் துரதிர்ஷ்டவசமாக இங்கே ஒரு திருப்பம் உள்ளது.
காவல்துறையின் "Deep Analysis" ன் போது மடிக்கணினியில் உள்ள Data முற்றிலும் சிதைந்துவிட்டது. எனவே, அவர்கள் மடிக்கணினியைத் திருப்பி அனுப்பியபோது வள்ளி தனது அனைத்து Data வையும் இழந்துவிட்டாள் 🙁




அவள் ஏமாற்றமடைந்தாள். அவளது ஏமாற்றத்தைக் கண்ட அவளுடைய தாய் அவளை ஆறுதல்படுத்தி வள்ளிக்கு "3 2 1 Backup Strategy"யை அறிமுகப்படுத்தினாள்.

# “3-2-1 BACKUP STRATEGY”

The 3-2-1 backup strategy is a data protection framework requiring 3 total copies of data, stored on 2 different media types, with 1 copy kept off-site.

Key Components

- 3 Copies (Total): Maintain the original data plus two distinct backups.
- 2 Different Media:

Use at least two different storage types (e.g., local hard drive + Hard disk + cloud) to prevent a single type of failure (e.g., disk failure, firmware bugs) from wiping out all copies.

- 1 Off-site Copy: Store at least one backup in a separate, remote location (e.g., cloud storage or a, secure off-site drive) to protect against site-specific disasters like fire or theft.

Implementation Example:

- Production Copy: Your working files on your computer.
- Backup 1 (Local): An external hard drive or a NAS device.
- Backup 2 (Off-site): A cloud service like Google Drive

முதல் பார்வையில் இது முட்டாள்தனமாகத் தோன்றலாம், இருப்பினும் அனைத்து முக்கியமான Data களுக்கும் இதுபோன்ற Backup Strategy வைத்திருப்பது எப்போதும் நல்லது.
எல்லாவற்றிற்கும் மேலாக தொழில்நுட்பம் என்பது மனிதர்களால் உருவாக்கப்பட்ட ஒன்று, அது சில சமயங்களில் நிச்சயமாக தோல்வியடையக்கூடும்.

தரவு இழப்புக்கு நீங்கள் தயாரா? இல்லையென்றால் உடனடியாக " Backup Strategy " ஐ செயல்படுத்தவும்.

-Veera


Silent Sunshine Deficit:
Why Many Indian Women in Germany Are Vitamin D Deficient – And Why It Matters
30% in Germany are Vitamin D Deficient • Over 50% in Winter
GERMANY'S VITAMIN D REALITY
30.2% Deficient
31.3% Suboptimal
38.4% Adequate
52%
Spring Summer Autumn Winter
Latitude 47°–55°
Limited UVB: March–October
WHY INDIAN WOMEN AT HIGHER RISK
Darker Skin
Less Vitamin D
Covered Clothing
Limited Sun Exposure
Indoor Lifestyle
Work & Homebound
Diet Gaps
Low in Fatty Fish & Dairy
THE THYROID CONNECTION
Vitamin D Affects Immunity & Thyroid Health
Hashimoto's
Hypothyroidism
Autoimmune Issues
Inflammation
HEALTH IMPACTS
Osteoporosis
Heart Disease
Diabetes
Depression
TAKE ACTION
Get Sun Exposure
2–3x Week • March–Oct
Eat Vitamin D Foods
Consider Supplements
If Needed
Vitamin D Levels
<30 nmol/L Deficient
30–49 nmol Suboptimal
≥50 nmol/L Adequate
"Not just bones—Thyroid, Immunity & More"
Awareness is the First Step!

## எதிர்பார்ப்பு இல்லாத ஒரு போராளியின் உன்னத காதல்..

.

நன்றி : தமிழ் மரபு அறக்கட்டளை



எல்லாவற்றையும் தியாகம் செய்த போதும் தன் மனைவியின் மீதான காதலை மட்டும் இழந்துவிடாத நல்லகண்ணு !

எதிர்பார்ப்பு இல்லாத ஒரு போராளியின் உன்னத காதல்...

(தோழர் நல்லகண்ணு அவரது மனைவியைப் பற்றி கூறியது.}

என் மனைவிக்கு உடல் சொகமில்லாம போச்சு. ஆஸ்பத்திரியில வெச்சி மருத்துவம் பாத்தோம். ஆனாலும் காப்பாத்த முடியல. மாசங்கள் உருண்டோடுனாலும் அவளோட இழப்பை என்னால ஜீரணிக்க முடியல. போராட்டம், பொதுக்கூட்டம்னு என் உடல் எங்கெங்கயோ அலஞ்சுட்டு இருந்தாலும், மனசு அவளை நினைச்சுட்டேதான் இருக்கு. அந்த வேதனையைச் சுமந்துட்டேதான் திரியுறேன். என்னை, என்னைவிட முழுசா புரிஞ்சிகிட்டவ என் மனைவி. என் வாழ்க்கையில எல்லா வகையிலும் அவளோட பங்களிப்பு இருந்துச்சு.



அவ அப்பாவும் கம்யூனிஸ்ட் கட்சிகாரர்தான். அதனால என்னை ஏத்துக்கிறது அவளுக்கு சுலபமா இருந்திச்சி. டீச்சரா வேலை பாத்தா. காசி பாரதி, ஆண்டாள்னு எங்களோட ரெண்டு பொம்பளப் புள்ளைகள வளர்த்து படிக்க வெச்சது, ஆளாக்குனது அவங்களோட எல்லா தேவைகளையும் என்னை எதிர்பார்க்காம அவளே செஞ்சிருவா. அரசியல் வாழ்க்கை, போராட்டம், காசு பணம் சேர்க்கத் துடிக்காத மனசுனு என் போக்குக்கு என்னை விட்டவ என் மனைவி. கட்சி வேலைகள்ல திரிஞ்சிட்டு வீட்டுக்குப் போகும்போது, கூடடைஞ்ச திருப்தி கிடைக்குற விதமா அந்த வீட்டை எனக்கானதா வெச்சிருப்பா. இப்போ வீட்டுக்குப் போனா, அவ இல்லாத அந்த வெறுமையும் தனிமையும் ரொம்ப கொல்லுது. தாங்கவே முடியாம வருது. சுத்தி எத்தனையோ பேர் இருந்தாலும், எனக்குனு யாரும் இல்லைங்கிறதை உணரவெச்சிட்டே இருக்கு அவளோட பிரிவு.

எந்த ராத்திரி வீட்டைக் விட்டுக் கிளம்புவேன், எந்த ராத்திரி வீடு திரும்புவேன்னு தெரியாத ஒரு வாழ்க்கை என்னோடது. உண்ணாவிரதம் இருக்கக் கெளம்புனாலும், ஜெயில்ல இருக்க வேண்டி வந்தாலும் ஒரு வார்த்தை வருத்தமாவோ, மறுப்பாவோ சொல்லாம அனுப்பிவைப்பா. என் புள்ளைங்க, 'அப்பா உங்களுக்கு வயசாயிருச்சு... அரசியல் வேலைகளையெல்லாம் கொஞ்சம் குறைச்சுக்கோங்கங்க'னு சொன்னப்போகூட, என் மனைவி அப்படி ஒருநாளும் எங்கிட்ட சொன்னதே கிடையாது. ஏன்னா, கட்சிப் பணிகள் இல்லாம என்னால இருக்க முடியாதுனு அவளுக்குத் தெரியும். ஆனா, 'நான் இல்லாமயும் உங்களால இருக்க முடியாது'ங்கிறதை இப்படிப் பிரிவுல உணர்த்திட்டுப் போயிட்டா.

எங்க கிளம்பினாலும், 'போய் சேந்துட்டீங்களா?'னு ஒரு போன் பண்ணுவா. 'சாப்புட்டீங்களா?'னு கேட்பா. 'எங்க இருக்கீங்க?'னு ஒரு போன் வரும். இப்போ எதுவுமே இல்ல. கண்ண மூடுனா முழுக்க ரஞ்சிதம் நெனப்பாதான் இருக்கு. முன்னாடி நான் அசைவம் சாப்பிடுவேன். இப்ப அஞ்சு வருசமா சைவம்தான். அவ வைக்கிற மீன் குழம்புல சோத்தை ஒரு பிடி பிடிப்பேன். அவ வைக்கிற ரசம் ரொம்ப நல்லா இருக்கும். எனக்குப் பிடிக்கும்னு அடிக்கடி ரவா லட்டு செய்வா. 'என்னை நீ எதிர்பார்த்து இருக்கக் கூடாது, உனக்கு பசிச்சா சாப்பிடு'னு என் கல்யாணத்தை ஒட்டியே சொல்லிட்டேன். அதனால நாங்க சேர்ந்து சாப்பிடுவதே குறைவுதான். ஆனாலும் நான் சாப்பிடும்போது கூட உட்கார்ந்து பேசிட்டு இருப்பா.



ஒரு சுவாரசியம் என்னனா நான் ஜெயில்ல இருந்து வந்த பிறகுதான் எங்களுக்கு கல்யாணமே நடந்திச்சி. புதுமணத் தம்பதியா நாங்க பேசிக்கிட்ட விஷயங்கள்லாம், என்னோட ஜெயில் அனுபவங்களாதான் இருந்துச்சு. நிறைய கல்யாணத்தை தலைமை தாங்கி நடத்திருக்கேன். அப்போவெல்லாம், 'மனைவியை அதிகாரமா மிரட்டக் கூடாது. அன்பா இருக்கணும், சமமா நடத்தணும்'னு சொல்லித்தான் ஆசிர்வதிப்பேன். என் வாழ்க்கையில ரஞ்சிதத்துக்கு அப்படி ஒரு சமத்துவத்தை நான் கொடுத்தாலும், அவ எனக்காக ரொம்ப விட்டுக்கொடுத்து போயிருக்கா.
என்னைத் தேடி வர்றவங்களைப் பத்தி அவளுக்குத் தெரியும். என் மனசு நினைக்கிற மாதிரியே அவங்களை உபசரிப்பா. ரஞ்சிதம் நிறைய புத்தகங்க படிப்பா, பேப்பர் படிப்பா. ஜெயகாந்தன் சிறுகதைகள் பத்தி பேசுவா. நான் எதையாவது படிக்காம விட்டுட்டாலும், 'இதப் படிக்கலையா நீங்க?'னு கேட்பா. திடீர்னு எதாவது செய்தியைக் காட்டி, 'இதப் பாத்தியளா?'னு கேட்பா. 'இல்லையே...'னு சொன்னா, 'இதக்கூடப் பாக்காம என்ன படிக்கிய?'னு கேட்பா. இப்போவெல்லாம் பேப்பர், புத்தகம் படிக்கும்போது, 'எதையாச்சும் படிக்காம விட்டுட்டா அதை எடுத்துக்காட்ட அவ இல்லையே'னு ரஞ்சிதத்தோட நினைவுகள் நான் படிக்கிற ஒவ்வொரு எழுத்துலயும் பின்னிக்குது.
நான் சம்பாதிச்சுது என்னனு எல்லாருக்கும் தெரியும். வெளியே போகும்போது செலவுக்கு அவகிட்டதான் காசு வாங்கிட்டுப் போவேன். கொஞ்சம் நிலம் இருந்து அதுல அரிசி வரும். மத்தபடி 'அது இல்ல இது இல்ல'னு எதுவும் எங்கிட்ட சொல்லாம, அவளே சமாளிச்சு குடும்பத்தக் கொண்டு போனா. என் பிறந்தநாளுக்கு துணிமணி எடுத்துக் கொடுப்பா. அவளுக்கு, நான் வீட்டுல இருந்தாலே பரிசுதான்னு சொல்லுவா. எப்பவாச்சும் டெல்லிக்குப் போனா அவளுக்கு சேலை எடுத்துட்டு வருவேன். ரொம்ப சந்தோசப்படுவா. வெளிய போயிட்டு நேரடியா வீட்டுக்கு வர்றதா இருந்தா எதாவது பண்டம் வாங்கிட்டு வந்து கொடுப்பேன்.
எங்க அப்பா, என் கூடப் பொறந்தவங்களுக்கு எல்லாம் அவங்கவங்க பேருல வீட்டை எழுதிவெச்சாரு. என் பங்கு வீட்டை மட்டும் என் மனைவி பேருலதான் எழுதி வெச்சிருக்காரு. பொது வாழ்க்கையில இருக்கேன், வீட்டையும் வித்து செலவு பண்ணிடுவேனோனு பயம் அவருக்கு!
ரஞ்சிதம் கிறிஸ்டியன். அதனால பைபிள் கதைகளை அடிக்கடி சொல்லுவா. எல்லார்கிட்டயும் அன்பா இருக்கணும், எல்லாரையும் சமமா நடத்தணும்னு சொல்லுவா. 'நான் செத்துப் போயிட்டேன்னா, நம்ம சொந்த ஊருலதான் அடக்கம் பண்ணனும்ம்னு'னு சொன்னா. அவ ஆசைப்படியே செய்தேன். அவ இறக்குறதுக்கு ஒரு மாசத்துக்கு முன்னாடியே, அவ இனி நாள்கணக்குலதான் என்கூட இருக்கப்போறானு தெரிஞ்சுபோச்சு. அந்த நாட்கள்ல ஆஸ்பத்திரியும் வீடுமாதான் இருந்தேன். அவ இறந்த அன்னைக்கு, என்னுல இருந்து பாதி உசுரு கழண்டுபோன மாதிரி இருந்துச்சு. இப்பக்கூட அப்படியேதான் இருக்கேன்.
வயசான காலத்துல, பொண்டாட்டி போனதுக்கு அப்புறம் புருஷன் இருக்குறது கொடுமையினு சொல்லுவாங்க. இப்பதான் எனக்கும் புரியுது இந்தப் பிரிவு எவ்வளவு துயரமானதுனு. என் மனசு அவளுக்குத் தெரியும்னாலும், 'எனக்கு எல்லாமே நீதான்'ங்கிறதை இருக்கும்போது அவகிட்ட எத்தனை தடவை வார்த்தையில சொல்லியிருக்கேன்னு தெரியல.
வருசா வருசம் காதலர் தினக் கொண்டாட்டங்களை செய்தியாதான் பேப்பர்ல படிப்பேன். இந்த வருஷம் படிக்கும்போது, ரஞ்சிதம் முகம்தான் வந்துபோகுது. அவ நெனப்பை என்ன செய்ய?""

# அறிந்ததில் அறியாதது



**பந்திக்கு முந்து ! படைக்குப் பிந்து !!**

தவறான புரிதல்:

பந்திக்கு முதலில் போய் உட்கார்ந்து கொள்ள வேண்டும்; இல்லாவிடில் பலகாரம் நமக்கு முழுமையாக கிடைக்காது, போருக்கு செல்பவன் படைக்குப் பின்னால் நின்று கொள்ள வேண்டும். அப்படி செய்தால், உயிருக்கு ஆபத்து வராது.

உண்மையான பொருள்:

பந்திக்கு முந்து என்பது சாப்பிடப் போகும் போது நமது வலது கை எப்படி முன்னோக்கி செல்கிறதோ, அது போல போரில், எவ்வளவு தூரம் வலதுகை வில்லின் நாணை பிடித்து பின்னால் இழுக்கிறதோ, அந்த அளவுக்கு அம்பு வேகமாய்ப் பாயும். இது போருக்குப் போகும் வில்வீரருக்காக சொல்லப்பட்டது.

# மாதம் ஒரு சொல்



**Vast open space**

**நீள்வெளி**

# கீற்றல்கள்




AADHYA WELCOMING SPRING



SHREYA`S MICKEY MOUSE

# WILDLIFE WONDERS AROUND THE WORLD

*By Jaithik Avinash, Junior Wildlife Reporter*

## Did You Know? -Unknown Creatures Edition

### Axolotls

The axolotl is known as the "smiling salamander."

- Axolotls stay young forever they keep their baby features even as adults.
- They have fluffy external gills that help them breathe underwater.
- Axolotls can regrow lost body parts, like legs and even parts of their heart!
- They are critically endangered in the wild.





### Panda Sea Slug

Yes... this tiny sea creature really looks like a mini panda! 🐼

- It's actually a type of sea slug.
- Their bright colors warn predators: "Don't eat me!"
- Some sea slugs can steal stinging cells from other animals for protection.
- They are very tiny sometimes smaller than your fingernail.



### Sea Anemone

Looks like a flower... but it's an animal!

- Sea anemones are related to jellyfish.
- Their tentacles can sting.
- Some fish (like clownfish) live safely among them.
- They can move slowly, even though they look stuck.



## Tardigrade (Water Bear)



One of the toughest creatures ever discovered!

- Tardigrades are microscopic too small to see without a microscope.
- They can survive extreme heat, freezing cold, and even space 🐼
- When conditions are bad, they dry up and "sleep" for years.
- Scientists call them "super survivors."



## Armadillo

Nature's little armored explorer.

- Armadillos have hard protective shells.
- Some species can roll into a ball when scared.
- They are excellent diggers.
- Armadillos almost always give birth to identical quadruplets!



## Aardvark

A nocturnal animal with a super long tongue.

- The name aardvark means "earth pig."
- They use their long sticky tongue to eat thousands of ants and termites.
- Aardvarks are strong diggers and make underground homes.
- They come out mostly at night.




**Which creature amazed you the most and why? Draw it and send it to us**





CTRL + Learn: My Computer Adventures-Edition 5

# The Creative Side of Computers

BY SANJAY SANTHOSH KUMAR, AGE 12

**Digital Art: Drawing With Pixels**
**Computers aren’t just for gaming and homework, they’re amazing for creating art!**

Tools you can try:

1. Paint 3D – simple drawing and 3D shapes
2. Canva – posters, cards, school projects
3. Krita – free drawing app for artists
4. Procreate (iPad) – advanced digital painting

Fun things to make:

- Wallpapers
- Cartoon characters
- YouTube thumbnails
- Stickers
- School project illustrations

**Video Creation: Become a Mini Filmmaker**
**You can turn simple videos into cool mini-movies!**

Beginner-friendly apps:

- CapCut
- iMovie
- Clipchamp
- Kinemaster

Learn to:

- Cut and join clips
- Add music & transitions
- Use sound effects
- Add subtitles

Tip: Start by making a 30-second montage of your week!

**Audio & Music Creation**
**Yes, you can compose your own music on your computer!**

Try these tools:
1. Soundtrap – beginner-friendly
2. Audacity – record and edit sound
3. GarageBand (Mac/iPad) – create full songs

Things you can make:
- Background music
- Podcasts
- Sound effects
- Short remixes

Graphic Design: Make Things Look Awesome

**Graphic design is all about combining shapes, text, and images to communicate ideas.**

Tools:
- Canva
- Adobe Express
- ixlr

Try designing:
1. Book covers
2. Infographics
3. Social media posts
4. Science project diagrams

Tip: Use simple fonts, large titles, and matching colors to make your designs look professional!

**Presentation Magic:**
**Transform your school presentations from "okay" to "WOW!"**

Try:
- Canva slides
- Google Slides themes
- PowerPoint animations

Presentation tricks:
- Use big, clean headings
- Add icons instead of too many words
- Use images to explain ideas

**Creative STEM Projects**
**Computers help in science too!**

Try:

- Making a digital science journal
- Designing charts for experiments
- Simulating solar systems
- Building coding art in Scratch

**Fun Creative Tech Facts**
**Pixar made Toy Story using 117 computers.**

- Minecraft was created by one person at first.
- Digital art uses layers like transparent sheets stacked together.
- The first digital camera was invented in 1975 and weighed 3.6 kg!

**3D Creation & Modeling**
**Want to build objects, characters, or even entire worlds?**

Start with:

1. Tinkercad – perfect for beginners
2. Blender – for advanced 3D animation
3. Minecraft Education Edition – build virtual 3D spaces

You can create:

- Robots
- Houses
- Game characters
- 3D art scenes

**Pro Learning Tips**

- Pick one creative skill and practice for 10 minutes a day.
- Watch free tutorials on YouTube.
- Join online art or editing challenges.
- Try recreating your favorite designs or posters.



*About the Author*
*Sanjay Santhosh Kumar, 12, loves exploring computers, has started learning coding, especially Python and enjoys discovering new tech tips each month. Outside the computer, he enjoys reading storybooks and comic books, playing with friends, and has a keen interest in space and general knowledge quizzes.*

# Short and Easy German Sentences

🚻 **Wo ist die Toilette?**
Where is the bathroom?

🧳 **Ich habe meinen Koffer verloren**
I lost my suitcase.

🚕 **Ich brauche ein Taxi**
I need a taxi.

🏨 **Ich habe ein Zimmer reserviert**
I have a room reserved.

🧭 **Ich suche den Bahnhof**
I'm looking for the train station.

🍕 **Das schmeckt sehr gut!**
That tastes very good!

💊 **Ich brauche eine Apotheke**
I need a pharmacy.

🧍 **Ich warte auf meine Freunde**
I'm waiting for my friends.

📅 **Heute ist Montag**
Today is Monday.

😴 **Ich will schlafen**
I want to sleep.

Übersetzt von Guruprasanth Meyyarasu

# பதில் தேடி விளையாடு

1. உன்னிடம் இருக்கும் போது நீ அதை பகிர்ந்தால் அது குறையும். அது என்ன?

2. என்னிடம் சாவிகள் உள்ளன, ஆனால் பூட்டுகளைத் திறக்க முடியாது. நான் யார்?

3. என்னை வெட்டினால் நான் அழ மாட்டேன், ஆனால் உன்னை அழ வைப்பேன். நான் யார்?

4. நான் நிறைய துளைகள் கொண்டவன், ஆனால் தண்ணீரை தாங்கி நிற்பேன். நான் யார்?

பதில்:
1.ரகசியம்
2. பியானோ / கீபோர்ட்
3.வெங்காயம்
4. ஸ்பாஞ்ச்

# நிழற்பதிவு



EARLY SPRING BLOSSOMS

-Sivakumar

# EARNING IN THE CRYPTO WORLD

*A Beginner's Guide to DeFi Yields vs. Traditional Banking*

March 2026 | DeFi Education Series

## What is DeFi and Why Should You Care?

Imagine a bank that never sleeps, never asks for your ID, and pays you far more interest than any savings account you have ever seen. That, in a nutshell, is Decentralised Finance or DeFi.

DeFi is a collection of financial services built on blockchain technology. Instead of a bank sitting in the middle of every transaction, smart contracts (self-executing pieces of code) handle everything automatically. No bank branch, no manager, no waiting three business days for your money.

Anyone with an internet connection and a crypto wallet can participate. Whether you live in New York or a remote village with no local bank, DeFi treats everyone equally. Your returns are paid in real time, sometimes every single block of the blockchain, which is every few seconds.

## How Can You Actually Earn Money in DeFi?

There are three main ways people generate income in the DeFi world:

### 1. Staking —> Lock It and Earn It

Staking means depositing your crypto into a protocol and earning rewards for doing so. Think of it like putting money in a fixed-deposit account, except the rates are dramatically higher and you can usually withdraw whenever you like.

The most popular staking option for cautious investors involves stablecoins, cryptocurrencies pegged to a real-world currency like the US Dollar. Because stablecoins do not go up and down in value like Bitcoin, the main risk is the protocol itself, not market swings.

### 2. Liquidity Providing —> Be the Exchange

Decentralised exchanges (DEXes) like Uniswap need pools of tokens so that people can swap one coin for another. When you deposit tokens into one of these pools, you become a liquidity provider (LP) and earn a share of every trading fee generated by that pool. The more trades happen, the more you earn.

### 3. Yield Farming —> Chasing the Best Returns

Yield farming involves moving your assets between different protocols to chase the highest available return. It can be very profitable, but it requires more time, knowledge, and risk tolerance. Some farmers earn extraordinary returns, but the risks are equally extraordinary.

## Stablecoin Yields: What You Can Realistically Expect

For most beginners, staking stablecoins is the safest entry point into DeFi earnings. Here is a realistic snapshot of what major protocols are offering in early 2026:

| Protocol | Stablecoin | Approx. APY | Risk Level |
|---|---|---|---|
| Aave (v3) | USDC / USDT / DAI | 4% – 8% | Low |
| Curve Finance | 3pool (USDC/USDT/DAI) | 4% – 7% | Low |
| Compound | USDC / DAI | 3% – 6% | Low |
| Sky (ex-MakerDAO) | sDAI (savings DAI) | 5% – 8% | Low-Med |
| Pendle Finance | Various stablecoins | 6% – 15% | Medium |
| Ethena (USDe) | USDe stablecoin | 8% – 20% | Medium-High |

On average, staking stablecoins in reputable DeFi protocols yields somewhere between 4% and 10% APY under normal market conditions. In periods of high activity or when protocols run incentive campaigns, those numbers can spike to 15–20% temporarily.

## DeFi vs. Traditional Banks: The Numbers Side by Side

Here is how DeFi compares to what your local bank is offering:

| Feature | Traditional Bank | DeFi (Stablecoins) | DeFi (Risky Pools) |
|---|---|---|---|
| Typical APY | 0.5% – 5% | **4% – 15%** | 20% – 100%+ |
| Risk Level | Very Low | Low – Medium | High – Very High |
| Access | By bank approval | **Anyone with a wallet** | Anyone with a wallet |
| Transparency | Limited | Fully on-chain | Fully on-chain |
| Insurance | Govt. backed (FDIC) | **None (usually)** | None |
| Liquidity | Days to weeks | Instant | Varies |

As of early 2026, most major banks in the US offer savings account rates between 0.5% and 5% APY (with high-yield online savings accounts at the top end). The European Central Bank benchmark rate sits around 2–3%, meaning European savers often earn even less. Against this backdrop, even conservative DeFi yields of 5–8% look compelling.

The critical difference, however, is risk. Bank deposits are typically insured by government schemes (up to $250,000 in the US via FDIC). DeFi offers no such safety net, if a protocol is hacked or a stablecoin loses its peg, you can lose money

## Understanding the Risks - Honestly

DeFi is exciting, but it is important to go in with your eyes open. Here are the main risks every newcomer should understand:

- ⚠ **Smart Contract Risk:** Smart Contract Risk: The code running a DeFi protocol could contain bugs. Hackers have stolen hundreds of millions of dollars from flawed protocols. Always use established, audited protocols.
- ⚠ **De-peg Risk:** Stablecoin De-pegging: Some stablecoins have lost their dollar peg and collapsed entirely (TerraUSD/UST in 2022 is the most infamous example). Stick to battle-tested stablecoins like USDC, USDT, or DAI.
- ⚠ **Liquidation Risk:** Liquidation Risk: If you borrow against your crypto (a popular DeFi strategy), a drop in prices can trigger automatic liquidation, wiping out your collateral.
- ⚠ **Regulatory Risk:** Regulatory Risk: Governments around the world are still figuring out how to regulate DeFi. Rules can change quickly and affect protocol availability.
- ⚠ **Scam Risk:** Scams and Rug Pulls: New, unaudited protocols sometimes turn out to be outright fraud. If an APY sounds impossibly high (1,000%+), treat it as a red flag.

---

## How to Get Started Safely

If you are curious about DeFi yields but want to start cautiously, here is a simple path forward:

- **Step 1 —> Get a Wallet:** Start with a reputable wallet such as MetaMask or Coinbase Wallet. Never share your seed phrase with anyone.
- **Step 2 —> Buy Stablecoins:** Buy a well-known stablecoin such as USDC on a regulated exchange (Coinbase, Kraken, Binance). USDC is issued by Circle and is backed 1:1 with US dollars.
- **Step 3 —> Deposit in a Top Protocol:** Choose a large, audited protocol, Aave or Compound are good starting points. Deposit your USDC and start earning. Your interest accrues in real time.
- **Step 4 —> Start Small:** Only invest what you can afford to lose entirely. Start small, learn how everything works, and scale up only when you are confident.
- **Step 5 —> Monitor Regularly:** Track your positions using a portfolio tracker like DeBank or Zapper. Watch for any unusual activity in your wallet.

---

## The Bottom Line

DeFi represents one of the most significant shifts in personal finance in decades. For the first time, anyone with an internet connection can access financial tools and interest rates that were previously reserved for institutional investors or the wealthy.

Staking stablecoins in established DeFi protocols offers yields of 4–10% on average, often 3 to 10 times more than a traditional savings account. But this comes with real risks: no government insurance, smart contract vulnerabilities, and a fast-moving regulatory landscape.

The smartest approach is education first, investment second. Understand what you are using, keep amounts small until you are comfortable, and never chase unsustainable yields. Done wisely, DeFi can be a powerful tool to make your money work harder for you in 2026 and beyond.

*-Kirubakaran*

# நிழல் நெஞ்சங்கள்

**03 - இரு நிலம் ஒரு மனம்**

புதிய வருடம்
சத்தம் இன்றி
பிறந்துவிட்டது

ஜன்னலுக்கு வெளியே
பனிக்காற்று
உள்ளே
பல நினைவுகள்

வாழ்க்கை
சிலருக்கு வேகமாகவும்
பலருக்கு நகராதது போலவும்
தோன்றினாலும்

காலம்
தாமதமின்றி
ஓடிக்கொண்டிருக்கிறது

சில நாட்கள்
இந்த மண்
வீடு போல தோன்றுகிறது

சில நாட்கள்
அந்த மண்
நம் கண்களை விட்டு
அகலாது நிற்கிறது

இடம் மாறினாலும்
உணர்வுகள்
உருமாறவில்லை

பிள்ளைகளின் சிரிப்பில்
பேரானந்தமும்
பெற்றோரின் அமைதியில்
பெருந்தவிப்பும்





இரண்டு உலகங்களுக்கு இடையே
உயிர்
கூடு விட்டு
கூடு பெயர்ந்து
திரிகிறது

எது முழுமை?
எது குறை?

பல கேள்விகள்
வரிசை கட்டி நிற்க
விடைகளுக்கு
மனதில் இடம்
இல்லாமலே போகிறது

கடலின் அலைகள் போலே
மனதின் அலைகளும்
ஓய்வதில்லையே

கடல்
காலையில் சூரியனையும்
மாலையில் சந்திரனையும்
தழுவிக்கொள்வது போல
நம் மனதும்
இரு மண்ணையும்
தழுவித்தான்
செல்லும்

இயற்கையின் சுழற்சியும்
உலகின் மாற்றமும்
காலமற்றவை
அதில்
சில மணித்துளிகள்
மட்டுமே
நமக்குச் சொந்தம் என்று
சற்றே தெளிந்து
எழுந்தது
உள்ளம்.

-மஞ்சுபார்கவி சுகுமாரன்

# வாசகர் மடல்கள்



உங்கள் பத்திரிகை அருமை. உங்கள் படைப்புகள் அதைவிட அருமை. இந்த அன்பும் தமிழும் என்றும் நிலைக்கட்டும். வாழ்க!

*-Dr Loganathan*

I really enjoyed reading your magazine. The design and articles are excellent. Great job to the whole team

*-Sharmila*

மதிப்புமிக்க விமர்சனங்களை அனுப்பிய அனைத்து வாசகர்களுக்கும் நட்பேடு மாத இதழ் மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறது. உங்கள் விமர்சனங்கள் எங்களை மேலும் சிறப்பாக செயல்பட ஊக்குவிக்கின்றன. மீண்டும் மீண்டும் மனமார்ந்த நன்றிகள்🙏🙏

*- Natpedu Magazine Team ❤️*
*Stuttgart Tamil Sangam e.V*

SHAPING YOUR FUTURE

# DENIZ ÜNVER REAL ESTATE INVESTMENTS

## Ready to invest in German real estate but not sure where to start?



Deniz Ünver Real Estate Investments makes the process simple, transparent, and fully guided, every step of the way.




## what we offer?

1.Understand your financial goals and create a plan that fits you.

2.Share expert insights to help you invest with confidence.

3.Build a tailored strategy to find the right property.

4. Support you through every step from paperwork to purchase.

5. Stay connected even after your investment for long-term success.

**Dont Hesitate to contact**
**Scan the WhatsApp QR code**
**or message +49 176 21476492**
to discuss your investment plans and discover how Deniz Ünver Real Estate Investments can help you build a secure and prosperous future.

## சொல்லுங்கள் வெல்லுங்கள்!
## வாசகர்களுக்கான சிறப்புப் பரிசு!

அன்பான வாசகர்களே,

இந்த இதழை நீங்கள் ஆர்வத்துடன் வாசித்திருப்பீர்கள் என்று நம்புகிறோம். உங்கள் வாசிப்பு அனுபவத்தை இன்னும் சிறப்பாக்க, ஒவ்வொரு மாதமும் ஒரு எளிய கேள்வியுடன் கூடிய பரிசுப் போட்டி நடத்துகிறோம். சென்ற மாதப் போட்டியில் பங்கேற்பாளர்கள் குறைவாக இருந்ததாலும், மகளிர் தினத்தை முன்னிட்டு, சென்ற மாதமும் இம்மாத இதழிற்கும் தங்கள் பங்களிப்புகளை வழங்கிய அனைத்து மகளிரின் பெயர்களையும் போட்டிப் பட்டியலில் இணைத்துள்ளோம். வெற்றியாளர்களுக்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள்.







❓ இந்த மாதக் கேள்வி:

**இந்தத் தொகுப்பில் அம்மாவைப் பற்றிய கவிதை எந்த பக்கத்தில் அமைந்துள்ளது?**

உங்கள் பதில்களை, stsnatpedu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள் (email subject: Natpedu_Quiz2).

இந்த மாதம் வரும் அனைத்துப் பதில்களிலும் இருந்து குலுக்கல் முறையில் 2 வாசகர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும் 🎁✨ஆகவே, தவறவிடாமல் உங்கள் பதிலை அனுப்புங்கள்.

**இந்தப் பகுதி தொடர்ந்து சிறப்பாக நடைபெற, இதில் அதிகமான வாசகர்கள் பங்கேற்பது மிகவும் முக்கியமானது. ஆகையால், இதில் இடம்பெறும் கேள்விகளுக்கு உங்கள் பதில்களை மின்னஞ்சல் மூலம் அனுப்பி, உற்சாகமாக கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.** 📩

வாசிப்போம்- எழுதுவோம்- வெல்வோம்!!



# இறுதியல்ல நிறைவு

மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா!" — கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை



கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாடிய இந்த வரிகள் வெறும் கவிதை அல்ல. அது பெண்மையின் மகத்துவத்தைப் போற்றும் ஒரு மந்திரம். பெண் என்பவள் இந்த உலகின் ஆதார சக்தி.

அவளது பொறுமை, அன்பு மற்றும் விடாமுயற்சி ஆகியவையே இந்தச் சமூகத்தை முன்னேற்றி வருகின்றன. கவிமணியின் வரிகளுக்கு உயிர் கொடுக்கும் வகையில் அமைந்தது, திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலையைச் சேர்ந்த ஸ்ரீபதி என்ற இளம் பெண்ணின் வாழ்க்கை.
மலைவாழ் சமூகத்தைச் சேர்ந்த ஸ்ரீபதிக்கு கல்வி என்பது எளிதாகக் கிடைக்கவில்லை. ஆனாலும், வழக்கறிஞராக வேண்டும் என்ற லட்சியத்துடன் அவர் கடினமாக உழைத்தார். அவரது வாழ்க்கையில் ஒரு மிகப்பெரிய சோதனை வந்தது. அவர் சிவில் நீதிபதி தேர்வுக்கு விண்ணப்பித்திருந்த நேரத்தில் கர்ப்பிணியாக இருந்தார்.
தேர்வு நடைபெற இரண்டு நாட்கள் இருக்கும்போது அவருக்கு குழந்தை பிறந்தது. அறுவை சிகிச்சை முடிந்து உடல் சோர்வுடன் இருந்த அந்த நிலையில், பெரும்பாலானோர் ஓய்வெடுக்க விரும்புவார்கள். ஆனால் ஸ்ரீபதி அதை ஒரு தவமாகவே கருதினார். பிரசவம் முடிந்து 48 மணி நேரமே ஆன நிலையில், தனது பச்சிளம் குழந்தையுடன் 200 கிலோமீட்டர் பயணம் செய்து சென்னைக்கு வந்து தேர்வு எழுதினார்.

2024 ஆம் ஆண்டு வெளியான முடிவுகளில் ஸ்ரீபதி வெற்றி பெற்று தமிழகத்தின் முதல் பழங்குடியின பெண் நீதிபதியாக உயர்ந்தார். ஒரு தாயாகவும், ஒரு சாதனைப் பெண்ணாகவும் அவர் செய்த அந்த போராட்டமே உண்மையான “மாதவம்” என்பதைக் காட்டுகிறது.

பெண்கள் இன்று விண்வெளி முதல் நீதிமன்றம் வரை அனைத்து துறைகளிலும் தடம் பதித்து வருகின்றனர். பெண்மை என்பது மென்மையானது மட்டுமல்ல; அது வலிமையும் தன்னம்பிக்கையும் நிறைந்தது. கவிமணி சொன்னது போல, ஒரு பெண்ணாகப் பிறந்து சாதனை படைப்பது என்பது அவள் செய்யும் பெரும் தவத்தின் பயனே.
பெண்மை ஒரு தவம்.இந்த மகளிர் தினத்தில், நம்மைச் சுற்றியுள்ள ஒவ்வொரு பெண்ணின் போராட்டத்தையும் வெற்றியையும் நாம் கொண்டாடுவோம்🙏🙏

**--- நன்றி! வணக்கம் ! ---**

**ஆசிரியர்: புவனேஸ்வரி மெய்யரசு**



General Feedback

இம்மாத நட்பேடு இதழ் பற்றிய உங்களின் கருத்துக்கள் மற்றும் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

அவற்றை stsnatpedu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி!

**ஆசிரியர்: புவனேஸ்வரி மெய்யரசு**
**பதிப்பாளர்: மஞ்சுபார்கவி சுகுமாரன்**